# யா/அருணோதயக்கல்லூரியின் எதிர்கால வளர்ச்சிக்கான நிதிசேகரிப்புத்திட்டம் (உறுதிப்பத்திரம்)

எமது கல்லூரியானது அண்மைக்காலமாக துரித வளர்ச்சியடைந்து வருகிறது. விளையாட்டுத்துறை, தமிழ்மொழித்தினம் என்பவற்றில் தேசியமட்டத்தில் சாதனைபடைத்து வருகிறது. கல்வியிலும் துரித வளர்ச்சியடைந்து வருகிறது. தற்போது உயர்தரத்தில் கணித விஞ்ஞான பிரிவுகளை உடைய 1AB பாடசாலையாகவும் தரமுயர்த்தப்பட்டுள்ளது. இந்நிலையில் எமது கல்லூரியில் இச்சாதனைகளைப்படைக்கும் மாணவர்கள் வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களாகவே காணப்படுகின்றனர். உயர்தரத்தில் கல்விகற்கும் மாணவர்களின் பெற்றோர்கள் அவர்களின் கல்விச்செலவுகளை மேற்கொள்ளமுடியாத நிலையில் காணப்படுகின்றனர். இவர்களுக்கு உதவுமுகமாகவும் ஏனைய விளையாட்டு உட்பட இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கான செலவுகளை ஈடுசெய்வதற்காகவும் நிரந்தரமான வருவாயை தரக்கூடிய ஓர் பாரிய நிதி சேகரிப்புத்திட்டமொன்றை ஆரம்பித்துள்ளோம். இத்திட்டத்தில் எமது கல்லூரியின் பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் இணைந்து கொள்வீர்கள் என மிகவும் உறுதியான நம்பிக்கையுடன் உள்ளோம்.

இத்திட்டத்தின் உள்ளடக்கம் பின்வருமாறு

1. பழைய மாணவர்களோ அல்லது நலன்விரும்பிகளோ வரும் 2012.04.01 இல் இருந்து முழுவதுமாகவோ் அல்லது பகுதி பகுதியாகவோ ரூ100000 வைப்புச்செய்யலாம். (கணக்கிலக்கம் 109-2001-90056085)
2. இவ்வைப்புப்பணம் நிரந்தர வைப்பில் இடப்படும்.
3. வைப்புப்பணம் ஒருவரது ஞாபகார்த்தமாகவும் வைப்பிடமுடியும்.
4. வட்டிப்பணம் மாத்திரம் வருடாவருடம் எடுக்கப்பட்டு கொடுப்பனவுகள் செய்யப்படும்.
5. வைப்புப்பணத்தை மீளஎடுப்பதாயின் பழையமாணவர்சங்க பொதுக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு குறிப்பிட்ட பணத்தை வைப்புச்செய்தவர் அல்லது அவரது பின்னுரித்தாளரின் அனுமதியுடன் மாத்திரமெ மீளப்பெறப்படும்.
6. இத்திட்டத்தில் இணைபவர்களது பெயர் விபரம் arunodaya.com இலும் alaveddy.ch இலும் வெளியிடப்படும்.
7. இத்திட்டத்தில் இணைபவர்களிடமிருந்து மீண்டும் பாடசாலைக்கென எந்த ஒரு நிதி சேகரிப்பும் மேற்கொள்ளப்படமாட்டாது.
8. இத்திட்டத்தின் மூலம் வருடாவருடம் கிடைக்கும் வட்டிப்பணத்திலிருந்து 80% கல்வி நடவடிக்கைகளுக்கும் 20% இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கும் செலவு செய்யப்படும்.
9. இத்திட்டத்தில் இணைபவர்களுக்கு பணம் நிரந்தர வைப்பில் இட்ட பின்னர் நிரந்தர வைப்புச்சான்றிதழின் பிரதி ஒன்று அனுப்பி வைக்கப்படும்.
10. வட்டிப்பணம் செலவு செய்யும் விபரம் வருடாவருடம் பரிசளிப்புவிழாவில் வெளியிடப்படும் அதிபர்அறிக்கையில் காட்டப்படுவதோடு அவ்அதிபர் அறிக்கை பணம் வைப்புச்செய்தவர்களுக்கு அல்லது அவரது உரித்தானவர்களுக்கு நேரடியாக அனுப்பி வைக்கப்படும்.
11. வருடாவருடம் வட்டிப்பணம் மீளப்பெறப்படும்போது பழையமாணவர்சங்க நிர்வாகசபைக்கூட்ட அறிக்கை வழங்கப்படும்.
12. வைப்பிலிடுவதோ அல்லது மீளஎடுப்தோ தொடர்பான வங்கி நடவடிக்கைகள் பாடசாலை அதிபருடன் பழையமாணவர்சங்க பொருளாளர் அல்லது செயலாளர் இணைந்து (இருவர்) மேற்கொள்ளலாம்.
13. இவ் உறுதிப்பத்திரம் இரு பிரதிகள் தயாரிக்கப்பட்டு பாடசாலை அதிபரும் வைப்புச் செய்தவரும் கையொப்பமிட்டு ஒன்று பாடசாலையில் பேணிப்பாதுகாப்பதோடு மற்றையது வைப்புச் செய்தவருக்கு வழங்கப்படும்.
14. வைப்புச் செய்தவர் பெயர் மற்றும் ஞாபகார்த்தப்பெயர் என்பன பாடசாலையின் முன்னால் காட்சிப்படுத்தப்படும்
15. தொடர்பு கொள்ள வேண்டிய தொபேசி இலக்கம்.
(இலங்கை 0770871996 அல்லது 0212241072) இங்கிலாந்து (U.K) 00447525740166

..........................................

அதிபர்

யா/அருணோதயக்கல்லூரி, அளவெட்டி

N. KETHEESWARAN
PRINCIPAL
J/ ARUNODAYA COLLEGE
ALAVEDDY
SRI LANKA